**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.163/2018</u>**

<u>முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் நாள் சனிக்கிழமை பிரதிவாதிகள் தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கவிதா, மொழிபெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரகு | தந்தை பெயர் | : | சண்முகம் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 05.04.2025

**D.W. : 2**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்கா, மேல அடையவளஞ்சான் தெருவில் வசிக்கிறேன். ஜவுளி வியாபாரம் செய்கிறேன். எனது ஆதார் அட்டை எடுத்து வந்துள்ளேன். எனக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி அழைப்பாணை வந்துள்ளது. எனக்கு இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஜெகதீஸ்வரன், ஆறுமுகம், ஐயப்பசாமி ஆகியோரை தெரியும். வாதி சாந்தியை தெரியும். 4, 5 பிரதிவாதிகளான மணிமேகலை மற்றும் பெரியநாயகி ஆகியோரையும் தெரியும். வாதி மற்றும்

பிரதிவாதிகள் அனைவரும் எனக்கு உறவினர்கள். வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தையான கணேசனை தெரியும். மேற்படி கணேசன் தனது மகன்களுக்கு ஒரு உயில் எழுதி வைப்பதாக கூறி என்னை எனது கடைக்கு வந்து அழைத்தார். அவரது இருசக்கர வாகனத்தை அவரே ஓட்டிக்கொண்டு எனது கடைக்கு வந்தார். அதிலேயே என்னை அவர் அழைத்து சென்றார். எனது தம்பி முருகன் என்பவரை 2 வது சாட்சிக்காக அழைத்தார். அவரும் வந்தார். 2010 ல் உயில் எழுதும்போது மேற்படி நிகழ்வு நடந்தது. தேதி, மாதம் ஞாபகமில்லை. என்னை ஸ்ரீரங்கத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்திற்கு கணேசன் அழைத்து சென்றார். கணேசனுடன் வேறு யாரும் வரவில்லை. அவர் மட்டும்தான் தனியாக வந்தார். என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ.1 உயிலில் 8 வது பக்கத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை கணேசன் எழுதி வைத்த உயிலில் சாட்சியாக போட்டேன். அந்த உயில் ஆவணத்தில் கணேசன் முதலில் கையொப்பம் போட்டார். அதை நான் பார்த்தேன். அதன்பிறகு என் தம்பி கையொப்பம் போட்டார். அதன்பிறகு நான் சாட்சியில் முதல் சாட்சியாக கையொப்பம் போட்டேன். இரண்டாவது சாட்சியாக என் தம்பி முருகன் கையொப்பம் போட்டார். நானும், எனது தம்பியும் கையொப்பம் போட்டதை கணேசன் பார்த்தார். கணேசன் கையொப்பம் போட்டதை நாங்கள் இருவரும் பார்த்தோம். பிவாசாஆ.1 ல் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையொப்பம் கணேசனுடையதுதான். அதில் சாட்சி போட்ட முருகன் எனது சின்னம்மா மகன் ஆவார். என் தம்பி முருகன் நான் சாட்சி கையொப்பம் போட்டதற்கு பிறகுதான் சாட்சி கையொப்பம் போட்டார். மேற்படி ஆவணம் பதிவு செய்தபோது கணேசன் நல்ல மனநிலையுடனும், நல்ல

உடல்நிலையுடனும்தான் இருந்தார். கணேசன் தனது கையொப்பங்களை பதிவாளர் முன்னிலையிலும்தான் போட்டார். அவரை யாரும் கட்டாயப்படுத்தவில்லை. அவர் எந்தெந்த சொத்துக்களைப் பொறுத்து ஆவணம் எழுதி வைத்தார் என்று எனக்கு தற்போது தெரியாது.

(குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.